

கழகத் தலைவர், தமிழக முதலமைச்சர் தளபதி அவர்களின் 72வது பிறந்தநாளை முன்னிட்டு காஞ்சி வடக்கு மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி சார்பில் மாவட்ட அமைப்பாளர் கோல்டு டி.பிரகாஷ் தலைமையில் ஆலந்தூரில் நடைபெற்ற மாபெரும் கிரிக்கெட் போட்டியை குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன் துவக்கி வைத்தார். அருகில் பகுதி செயலாளர்கள் என்.சந்திரன், ப.குணாளன், த.ஜெயக்குமார், மாவட்ட துணை அமைப்பாளர்கள் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

## தலைவர் மு.க.ஸ்டாலின் தலைமையில்

# தி.மு.க. பொதுக்குழு கூடுகிறது!

## பொதுச்செயலாளர் துரைமுருகன் அறிவிப்பு!



தலைவர் **மு.க.ஸ்டாலின்** அவர்கள் தலைமையில் 01-06-2025 ஞாயிற்றுகிழமை காலை 9.00 மணியளவில் தி.மு.க. பொதுக்குழுக் கூட்டம், மதுரை, உத்தங்குடி, "கலைஞர் திடலில் நடைபெறும்.

அதுபோது பொதுக்குழு உறுப்பினர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்: 1. கழக ஆக்கப்பணிகள்
2. தணிக்கைக்குழு அறிக்கை

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள் - 03.05.2025

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

## கல்வியாளர்கள் கூடிப் பாராட்டு விழா நிகழ்த்துவது

# முதல்வரின் வெற்றிக்குச் சூட்டும் மகுடம்!

## கவிப்பேரரசு வைரமுத்து புகழாரம்!



**சென்னை, மே 5 -**

**முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு, கவிப்பேரரசு வைரமுத்து எழுதியுள்ள கடிதத்தில், "உங்களுக்குக் (முதல்வருக்கு) கல்வியாளர்கள் கூடிப் பாராட்டு விழா நிகழ்த்துவது, உங்கள் வெற்றிக்குச் சூட்டும் மகுடமாகும்" என்று குறிப்பிட்டுள்ளார்.**

முதல்வர் அவர்களுக்கு, கவிப்பேரரசு வைரமுத்து அவர்கள் எழுதியுள்ள கடிதம் வருமாறு:-

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு,
வணக்கம்.

பல்கலைக்கழகங்களின் துணைவேந்தர்களை மாநிலங்களின் முதலமைச்சர்களே நியமித்துக் கொள்ளலாம் என்ற வரலாற்று உரிமையை உச்சநீதிமன்றத்தில் போராடிப் பெற்றுத்தந்த உங்களுக்குக் கல்வியாளர்கள் கூடிப் பாராட்டு விழா நிகழ்த்துவது உங்கள் வெற்றிக்குச் சூட்டும் மகுடமாகும்.



கண்ணகிக்குப் பெருமை கற்புக்கரசி என்று பெண்களால் பாராட்டப்பட்டதுதான் என்று இளங்கோவடிகள் எழுதினார். அதுபோல ஒரு ஆட்சித் தலைவருக்குச் சிறப்பு கல்வியாளர்களால் கொண்டாடப்படு வதுதான்.

முத்தமிழறிஞர் கலைஞர் இருந்திருந்தால் இந்த வெற்றியில் மகிழ்ந்து உங்கள் . நெற்றியில் இன்னொரு முறை முத்தமிட்டிருப்பார். என் மனம் எவ்வளவு கொள்ளுமோ அவ்வளவு மகிழ்ச்சியடைகிறேன்.

தமிழ்நாட்டுக்காக தவம் செய்த நீங்கள் இந்தியா முழுமைக்கும் மழைவரம் பெற்றுத் தந்திருக்கிறீர்கள். அதனால் இந்த விழா ஒரு தேசியத் திருவிழா வாகிறது.

கல்வியாளர்கள் உங்கள் தோளுக்குச் சூட்டும் மாலையில் நானும் ஒரு பூவாக இருக்கிறேன்; வாழ்த்துகிறேன்.

இவ்வாறு அக்கடிதத்தில் கவிப்பேரரசு வைரமுத்து அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

## ஒன்றிய பா.ஜ.க. ஆட்சி கேள்விகளைக் கண்டாலே அஞ்சுகிறது!

# யாருக்கும் அஞ்சாத ஊடகவியல் இல்லை என்றால் மக்களாட்சி இருளில் மாண்டுவிடும்!

## உலக பத்திரிகையாளர் சுதந்திர நாளையொட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப்பதிவு!

**சென்னை, மே 5 -**

**உலக பத்திரிகையாளர் சுதந்திர நாளையொட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், ஒன்றிய பா.ஜ.க. அரசு கேள்விகளைக் கண்டாலே அஞ்சுகிறது என்றும், யாருக்கும் அஞ்சாத ஊடகவியல் இல்லை என்றால் மக்களாட்சி இருளில் மாண்டுவிடும் என்றும் சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.**

இது குறித்து முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

ஊடக சுதந்திரத்துக்கான உலகத் தரவரிசைப் பட்டியலில் இந்தியாவின் இடம் 151 என படுபாதாளத்தில் உள்ளது. காரணம் என்ன?

ஏனென்றால் ஒன்றிய பா.ஜ.க. ஆட்சி கேள்விகளைக் கண்டாலே அஞ்சுகிறது. ஊடக அலுவலகங்களில் ரெய்டு நடத்துகிறது, செய்தியாளர்களைச் சிறையில் தள்ளுகிறது, பா.ஜ.க. அரசின் ஊழல்கள், உரிமை மீறல்கள் மற்றும் பெரும்பான்மைவாதப் போக்கை அம்பலப்படுத்துவோர்களை அடக்குகிறது.

உலகப் பத்திரிகை சுதந்திர நாளான இன்று, 'யாருக்கும் அஞ்சாத ஊடகவியல் இல்லையென்றால் மக்களாட்சி இருளில் மாண்டு விடும் என்பதை நமக்கு நாமே நினைவூட்டிக் கொள்வோம். அதனால்தான், பத்திரிகை சுதந்திரத்தைக் காப்பது என்பது ஊடகங்களுக்காக மட்டும் அல்ல, குடிமக்கள் அனைவரின் கேள்வி கேட்கும், உண்மையை அறிந்துகொள்ளும், அதிகாரத்தை நோக்கி உண்மையை உரைக்கும் உரிமைக்கானதாக ஆகிறது.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.



# தி.மு.க. இளைஞர் அணி

## இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

## ஒன்றிய-நகர-பகுதி-பேரூர் புதிய நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம்!

விருதுநகர் வடக்கு மற்றும் சிவகங்கை ஆகிய மாவட்டங்களில் நியமிக்கப்பட்டுள்ள இளைஞர் அணியின் புதிய நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்டம், மாவட்டச் செயலாளர், ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் செயலாளர்கள் முன்னிலையில், நடைபெற உள்ளது. புதிதாக நியமிக்கப்பட்ட இளைஞர் அணி நிர்வாகிகள் அனைவரும் தவறாமல், இக்கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். அறிமுகக் கூட்ட விவரம் வருமாறு:

| நாள் | நேரம் | கழக மாவட்டம் | இடம் |
|---|---|---|---|
| 06.05.2025 செவ்வாய்க்கிழமை | காலை 9.00 மணி | சிவகங்கை | ராஜேஸ்வரி மஹால், சிவகங்கை சாலை, திருப்பத்தூர். |

"அன்பகம்"
தேனாம்பேட்டை
சென்னை-18
நாள் : 02-05-2025

கலைஞர் 100 1924 - 2023

**உதயநிதி ஸ்டாலின்**
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி



மே1 உழைப்பாளர் தினத்தை முன்னிட்டு புதுக்கோட்டை மாநகரத்தில் பல்வேறு பகுதிகளில் ஆட்டோ இயக்கி வரும் 100 ஆட்டோ ஓட்டுநர்களுக்கு அவர்களுக்கான உடையும், தண்ணீர் பாட்டில், இனிப்புகள் வழங்கி மாநகர திமுக பொறுப்பாளர் வே.ராஜேஷ் கவுரவப்படுத்தி வாழ்த்தினார். இந்நிகழ்வில் மாநகர தி.மு.க. துணைச் செயலாளர் ப.ரெங்கராஜன், மாமன்ற உறுப்பினர் சி.மதியழகன், வட்ட கழக செயலாளர்கள் கண்மணி சுப்பு, பூக்கடை முருகேசன், தெட்சிணாமூர்த்தி, செல்வம், ரமேஷ், வழக்கறிஞர் ஆனந்த், சரவணன், நாகராஜன், இராஜேந்திரன், கார் கணேசன், ராகவன் ஆதிமூலம், இளமுருகன், ஏ.எம்.சிற்றரசு, அண்ணாதுரை செ.ரமேஷ், சரத், மணிமாறன், தட்டாம்பட்டி ரவி ஆகியோர் கலந்து கொண்டனர்.



ஓசூரில் கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட செயற்குழுக் கூட்டம், அவைத் தலைவர் யுவராஜ் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி பங்கேற்று ஆலோசனை வழங்கினார். உடன் கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டச் செயலாளர் ஒய்.பிரகாஷ் எம்எல்ஏ, மேயர் சத்யா, மாவட்ட துணை செயலாளர் முன்னாள் எம்.எல்.ஏ. முருகன், மாவட்டப் பொருளாளர் சுகுமாரன் உள்ளிட்ட ஏராளமானோர் உள்ளனர்.



புதுக்கோட்டை மாவட்டம், திருமயத்தில், பள்ளிக்கல்வித்துறை மற்றும் பொது நூலக இயக்ககம் சார்பில், பாராளுமன்ற மாநிலங்களவை உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட நிதியின்கீழ் ரூ.2 கோடி செலவில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள, சுதந்திரப் போராட்ட தியாகி தீரர் சத்தியமூர்த்தி நினைவு புதிய முழு நேர கிளை நூலக கட்டடத்தினை, முன்னாள் ஒன்றிய நிதி அமைச்சர் , மாநிலங்களவை உறுப்பினர் ப.சிதம்பரம் , சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி , சிவகங்கை பாராளுமன்ற உறுப்பினர் கார்த்தி ப.சிதம்பரம் ஆகியோர், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.அருணா, தலைமையில் 2.05.2025 அன்று திறந்து வைத்தார்கள். உடன், காரைக்குடி சட்டமன்ற உறுப்பினர் சா.மாங்குடி , மாவட்ட நூலக அலுவலர் மு.ப.காரல் மார்க்ஸ், செயற் பொறியாளர் (பொ.ப.து.) (கட்டட (ம) கட்டுமானப் பராமரிப்பு) ரவிச்சந்திரன் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.